# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம் 20-02-2024 செவ்வாய் கிழமை காலை 10.00** மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குலசேகரம் ரோடு சந்திப்பில் வடிகால் ஒடையில் மழைநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லாமல் தடுக்க இரும்பினால் ஆன மூடி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.812 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.399/2023/A2, நாள் 05-01-2024-ல் 2022-2023 மற்றும் 2023-2024-ம் ஆண்டிற்கான இந்நகராட்சி பங்கு தொகை (30000+30000) ரூ.60,000/- செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.526/2012/சி1

மன்றத்தீர்மான எண்.813 தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B4, திரு. பிரகாஷ் என்பவர் நடத்தி வந்தார். தற்சமயம் கடை அன்னரால் நடத்தப்படவில்லை. அச்சமயம் கடைக்காக செலுத்தியுள்ள கூடுதல் வைப்பு தொகையினை திரும்ப வழங்கிட கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பெயர் | வருடம் | வழங்க வேண்டிய தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு |
|---|---|---|---|---|
| 1 | திரு. பிரகாஷ் | 2012-2013 | 2,87,779/- | பதிவேடு V, பக்கம் எண்.181, வரிசை எண்.19, 20, 56 |

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3162/2023/**அ**2.

மன்றத்தீர்மான எண்.814 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கருங்கல் சாலை கடை எண்.33, திரு. அருள்தாஸ் என்பவரால் நடத்தப்பட்டு வந்த நிலையில் தற்சமயம் நவீன காய்கறி சந்தை அமைய உள்ளதால் கடையினை ஒப்படைப்பு செய்துள்ளார். தற்சமயம் கடைக்காக செலுத்தியுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட கேட்டுள்ளார். அன்னாரது வைப்புத்தொகையில் ரூ.1,52,286/- உள்ளது. மேலும் வாடகைத்தொகை அக்டோபர் 2023 வரையில் ரூ.40,710/- நிலுவையாக உள்ளது. எனவே வாடகை தொகையினை வைப்புத்தொகையில் ஈடு செய்து மீதித்தொகையான ரூ.1,11,576/-ஐ வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3161/2023/**அ**2.

மன்றத்தீர்மான எண்.815 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

1. Resolved that the Kuzhithurai Municipality is authorised to borrow a loan amount of **Rs.276.78 Lakhs** for " Conversion of existing street lights into energy efficient LED lights 1713 Nos Providing new energy efficient LED Lights 326 Nos "from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.145, MA&WS (MA2) Dept., dated 14-10-2022.

2. Resolved that the Kuzhithurai Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Kuzhithurai Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Kuzhithurai Municipality.

3. Resolved that the Kuzhithurai Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.

4. Resolved that the Executive officer be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of

principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.

5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Kuzhithurai Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.

6. The Kuzhithurai Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.
   ந.க.எண்.1966/20213/இ1.

மன்றத்தீர்மான எண்.816 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சியில் செய்யப்பட்ட திட்டப்பணிகளை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கீழ்கண்ட பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு செலவு பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை அந்தந்த நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | மாலை மலர் | - | 9,912/- |
| 2) | மாலை தமிழகம் | - | 23,100/- |
| 3) | தமிழ் முரசு | - | 9,744/- |
| 4) | தினகரன் | - | 9,975/- |
| 5) | தினத்தந்தி | - | 9,840/- |
| 6) | தினகரன் | - | 26,040/- |
| 7) | தினமலர் | - | 18,900/- |

மேலும், குழித்துறை நகராட்சி ஒருங்கிணைந்த நவீன சந்தை அடிக்கல் நாட்டு விழா பத்திரிக்கை விளம்பரம் செய்த வகையில் தீக்கதிர் பத்திரிக்கை ரூ.9800/- மற்றும் தினத்தந்தி பத்திரிக்கை 29,820/- மேற்படி தொகையினை வருவாய் நிதியின் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.817 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.2-ல் ராஜீவ் நகர் முதல் ஊத்தங்கரை வரை சிமெண்ட் கான்கிரீட் தளமாக சாலை பணி மேற்கொள்ள ரூ.28.00 இலட்சத்திற்கு பொது நிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.38181/2023/எம்.எ1, நாள் 15-12-2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள 09-01-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.‘

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. ஆல்பர்ட்ராஜ் | 9.91% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. மணிகண்டன் | 7.79% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | திரு. ஜெயசந்திரன் | 10% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 10% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள வரிசை எண்.3-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.2059/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.818 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் Y.M.C.A. முதல் துரும்பல் வரையுள்ள (Unicode 149011S027) சாலைப்பணிக்கு ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.38181/2023/எம்.எ1, நாள் 15-12-2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள 09-01-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. மணிகண்டன் | 15.49% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர் MJD கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 15.35% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் வரிசை எண்.2-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- ஒப்பந்ததாரர் திருவாளர் MJD கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் விலைக்குறைப்பு செய்து மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2059/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.819 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் திருத்துவபுரம் சந்திப்பு முதல் உண்டனாகுழி வரையுள்ள (Unicode 149002R005) சாலைப்பணிக்கு ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.38181/2023/எம்.எ1, நாள் 15-12-2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள 09-01-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. மணிகண்டன் | 10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திருவாளர் MJD கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 9.75% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலில் வரிசை எண்.2-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- ஒப்பந்ததாரர் திருவாளர் MJD கன்ஸ்ட்ரஸன்ஸ் விலைக்குறைப்பு செய்து மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ளார். எனவே பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2059/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.820 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சேதமடைந்த சாலைகள் சீரமைக்க ரூ.972.80 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025 (TURIP) திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:2459/2024/SS1 நாள்:01-02-2024-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்கு 23-02-2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.
ந.க.எண்.120/2024/இ1

மன்றத்தீர்மான எண்.821 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சியில் சேதமடைந்த சாலைகள் சீரமைக்க 15-வது நிதிக்குழு மானியம் Untied Grand 2023-2024 மற்றும் 2024-2025-ம் திட்டத்தின்கீழ் ரூ.69.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம ந.க.எண்:11919/2022/EA2, நாள்:29-01-2024-ன்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்கு 23-02-2024

அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.
ந.க.எண்.179/2024/இ1

மன்றத்தீர்மான எண்.822 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5-ல் கழுவன்திட்டை OHT-யில் தடுப்புச்சுவர் அமைக்க ரூ.5.40 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 15-வது நிதிக்குழு மானியம் 2022-2023 Tied Grant திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:18277/2022/EA2, நாள்: 07-02-2024-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்கு நகராட்சி வருவாய் நிதியின்கீழ் பங்களிப்பு தொகை ரூ.1.91 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.303/2024/இ1

மன்றத்தீர்மான எண்.823 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16-ல் பம்மம் OHT-யில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு 15-வது நிதிக்குழு மானியம் 2022-2023 Tied Grand திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:18277/2022/EA2, நாள்:07-02-2024-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு நகராட்சி வருவாய் நிதியின் கீழ் பங்களிப்பு தொகை ரூ.1.53 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.304/2024/இ1

மன்றத்தீர்மான எண்.824 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15 அட்டகுளம் சாலை கமனாட்டுவிளை சாலை சந்திப்பில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைநீர் சாலையில் வெள்ளம் போல் பெருக்கெடுத்து வீடுகளுக்குள் புகுந்து சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் பழுதுபார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம்) மட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.305/2024/இ1

மன்றத்தீர்மான எண்.825 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சியில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் சமையலறையில் குடிநீர் வசதி மற்றும் காய்கறிகள் கெட்டுபோகாமல் இருக்க குடிநீர் சாதன பெட்டி ஆகியவை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,80,000/- ரூபாய் மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்
ந.க.எண்.306/2024/இ1

மன்றத்தீர்மான எண்.826 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், காலிமனைவரி, தொழில்வரி மற்றும் கடை வாடகைக்குரிய நிலுவை மற்றும் நடப்பு தொகையினை பொதுமக்களிடம் இருந்து வசூல் செய்ய பொதுமக்களுக்கு அறியும் வண்ணம் தனிநபர் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1,00,000/-த்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1952/2014/அ1

மன்றத்தீர்மான எண்.827 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை, பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவு ஆகியவற்றில் குளிர்சாதனவசதி செய்ய ரூ.1.75 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.760, நாள் 22-12-2023-ன்படி மன்ற அனுமதி 30-01-2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்<br>திரு. ஆல்பர்ட்ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.டி. ஜஸ்டின்குமார் | 0.14% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள வரிசை எண்.1-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3196/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.828 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் தினசரி குடிநீர் சீராக வினியோகம் செய்யவும் மற்றும் 11 மேல்நிலை தொட்டிகளுக்கு தூய்மை பணி மேற்கொள்ளவும் 8 எண்ணிக்கை பணியாட்கள் (Mazdoor Grade II) தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.19.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.749, நாள் 22-12-2023-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 30-01-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.டி. ஜஸ்டின்குமார் | 3% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்<br>திரு. ஆல்பர்ட்ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள வரிசை எண்.2-ல் கண்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3180/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.829 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.